**Previous Examination date – 15.02.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 65 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : தாசமுத்து** | **Father/Husband's Name: நாராயணசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.08.2024**

**Accused present.**

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது தாளையூத்து கிராமத்தில் குடியிருந்து, ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் லாரி டிரைவராக வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.09.2017ம் தேதி சுமார் 8.30 மணியளவில் அ.சா.1 அவரது லாரியை எனது ஓட்டலுக்கு அருகே நிறுத்திவிட்டு லோடு இல்லை என்று விசேசத்திற்காக சென்றுவிட்டார். அப்போது அவர் நிறுத்தி விட்டு சென்ற லாரியை பார்த்தேன். பின்னர் அ.சா.1 எனது ஓட்டல் அருகே 11.09.2017ம் தேதி அன்று கடை அருகே வந்து பார்த்து போது அவர் நிறுத்திவிட்டு சென்ற லாரி காணவில்லை. அது சம்பந்தமாக ரவி என்பவரை நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

**2. வழக்குச்சம்பவத்திற்கு முன்பு அ.சா.1 எவ்வளவு நாட்களாக எனக்கு தெரியும் என்றால் சுமார் 2 வருட காலமாக தெரியும். அதில் 4–5 முறை மட்டும் அவரை பார்த்திருப்பேன். அ.சா.1 சம்பவ இடத்தில் லாரியை நிறுத்திவிட்டு என்னிடம் சொல்லிவிட்டு சென்றதாக சொல்லபடும் நிலையில் மேற்படி லாரி எப்போது காணாமல் போனது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 சொல்லிதான் லாரி காணாமல் போனது என்ற விபரம் குறித்து எனக்கு தெரியும்**

**என்றால் சரிதான். வழக்குச்சம்பவத்திற்கு முன்பே எதிரியை எனக்கு தெரியும். காணாமல் போன லாரியை யார் எடுத்து சென்றார்கள் என்ற விபரம் குறித்தோ, யாரிடமிருந்து  எங்கு வைத்து கைப்பற்றினார்கள் என்ற விபரம் குறித்தோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியாது. போலிசார் வழக்குசம்பவம் குறித்து புகார் கொடுத்ததற்கு பின்பு எனது கடையிலும் காவல் நிலையத்திலும் வைத்து விசாரணை செய்தார்கள். அ.சா.1 லாரி காணாமல் போனது தொடர்பாக புகார் கொடுத்தார் என்றும் அது சம்பந்தமாக தான் போலிசார் என்னை விசாரணை செய்தார் என்றும் மற்றவிபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.08.13 13:53:41 +0530

**நீதித்துறை நடுவர்**

**பழனி**

**Previous Examination date – 15.02.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 65 of 2018**

**Deposition of Witness P. W.3**

**Name : ரமேஷ்** **Father/Husband's Name: கிருஷ்ணசாமி**

**Village :** **Taluk :**

**Caste :** **Calling:**

**Religion:** **Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.08.2024**

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கரடிக்கூட்டத்தில் குடியிருந்து, சோலார் இன்டஸ்ரியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது இல்லை. கடந்த 14.09.2017ம் தேதி மாலை சுமார் 6–7 மணியளவில் நான் தாளையூத்து பெட்ரோல் பங்க் மற்றும் ஓட்டல் அருகே பேசி கொண்டிருந்த போது சாமிநாதபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் லாரி காணவில்லை என்ற சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது போலிசார் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்ட போது நான் உடனிருந்து போலிசார் தயாரித்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை பார்த்தேன். போலிசார் சம்பவ இடத்தை விசாரணை செய்த போது நானும், இளங்கோ என்பவரும் இருந்தோம். போலிசார் என்னை லாரி காணாமல் போனது பற்றி விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் வழக்கு சம்பவம் தொடர்பாக என்னிடம்கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. வேறு யாரிடமாவது கையொப்பம் வாங்கினார்கள என்று எனக்கு தெரியாது.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.08.13 13:53:48 +0530

**நீதித்துறை நடுவர்**
**பழனி**